# மதுரை அருகே கே எல் என் பொறியியல் கல்லூரியில் மாபெரும் வேலை வாய்ப்பு முகாம்




மதுரை அருகே பொட்டபாளையத்தில் உள்ள கே எல் என் பொறியியல் கல்லூரியில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் தமிழக அளவிலான வேலைவாய்ப்பு முகாம் இன்ஃபோசிஸ் வேலைவாய்ப்பு முகாம் ஜனவரி 17,18 மற்றும் 19 ஆகிய மூன்று நாட்கள் நடைபெறுகிறது

தமிழ்நாடு அரசின் முக்கிய முயற்சியான நான் முதல்வன் திட்டத்தின் கீழ், இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் ஒருங்கிணைந்த மாநில அளவிலான வளாக வேலை வாய்ப்பு முகாம் நடைபெறுகிறது. இன்ஃபோசிஸ் நிறுவனம் தங்களின் diversity hiring சார்பாக பெண்களுக்கான முகாம்களாக நடைபெறுகின்றது.

இந்த திட்டம் தமிழகம் முழுவதிலும் உள்ள பொறியியல் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வாய்ப்புகளை வழங்குவதோடு, திறமையான மாணவர்களை முன்னணி நிறுவனங்களுடன் இணைக்கும் முக்கிய முயற்சியாக அமைகிறது.

இந்த வேலைவாய்ப்பு முகாம்கள் கே.எல்.என் பொறியியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் 15 மாவட்டங்களில் இருந்து 2636 மாணவர்கள் இந்த முகாம்களில் பங்கேற்றனர். மேலும் தகவல்களுக்கு சம்பந்தப்பட்ட இடங்களில் உள்ள ஒருங்கிணைப்பாளர்களை தொடர்பு கொள்ளவும் அல்லது நான் முதல்வன் திட்டத்தின் அதிகாரப்பூர்வ வலைதளத்தை பார்வையிடவும் எனக் கூறியுள்ளனர்.

---

□ ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தார் திமுக வேட்பாளர் வி.சி. சந்திரகுமார்●_

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் போட்டியிட திமுக வேட்பாளர் வி.சி. சந்திரகுமார் வேட்புமனு தாக்கல் செய்தார். ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். திமுக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் உள்ளிட்டோர் சந்திரகுமாருடன் வருகை தந்தனர்.

